ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ காசும் கறையுடை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ காசும் கறையுடை ॥

## நாரணநாமம் தந்தமர்க்கு இடுநலம்

‡காசும் கறை உடைக் கூறைக்கும்⋆ அங்கோர் கற்றைக்கும்
ஆசையினால்⋆ அங்கவத்தப் பேர் இடும்⋆ ஆதர்காள்!
கேசவன் பேர் இட்டு⋆ நீங்கள் தேனித்திருமினோ⋆
நாயகன் நாரணன்⋆ தம் அன்னை நரகம் புகாள் (1)

அங்கொரு கூறை⋆ அரைக்குடுப்பதன் ஆசையால்⋆
மங்கிய மானிட சாதியின்⋆ பேர் இடும் ஆதர்காள்!⋆
செங்கண் நெடுமால்!⋆ சிரீதரா! என்றழைத்தக்கால்⋆
நங்கைகாள்! நாரணன்⋆ தம் அன்னை நரகம் புகாள் (2)

உச்சியில் எண்ணெயும்⋆ சுட்டியும் வளையும் உகந்து⋆
எச்சம் பொலிந்தீர்காள்!⋆ என் செய்வான் பிறர் பேர் இட்டீர்⋆
பிச்சை புக்காகிலும்⋆ எம்பிராந் திருநாமமே
நச்சுமின்⋆ நாரணன்⋆ தம் அன்னை நரகம் புகாள் (3)

மானிட சாதியில் தோன்றிற்று⋆ ஓர் மானிட சாதியை⋆
மானிட சாதியின் பேர் இட்டால்⋆ மறுமைக்கில்லை⋆
வான் உடை மாதவா!⋆ கோவிந்தா! என்றழைத்தக்கால்⋆
நான் உடை நாரணன்⋆ தம் அன்னை நரகம் புகாள் (4)

மலம் உடை ஊத்தையில் தோன்றிற்று⋆ ஓர் மல ஊத்தையை⋆
மலம் உடை ஊத்தையின் பேர் இட்டால்⋆ மறுமைக்கில்லை⋆
குலம் உடைக் கோவிந்தா!⋆ கோவிந்தா! என்றழைத்தக்கால்⋆
நலம் உடை நாரணன்⋆ தம் அன்னை நரகம் புகாள் (5)

நாடும் நகரும் அறிய⋆ மானிடப் பேர் இட்டு⋆
கூடி அழுங்கிக்⋆ குழியில் வீழ்ந்து வழுக்காதே⋆
சாடிறப் பாய்ந்த தலைவா!⋆ தாமோதரா! என்று
நாடுமின்⋆ நாரணன்⋆ தம் அன்னை நரகம் புகாள் (6)

மண்ணில் பிறந்து மண் ஆகும்⋆ மானிடப் பேர் இட்டு⋆ அங்கு
எண்ணம் ஒன்றென்றி இருக்கும்⋆ ஏழை மனிசர்காள்!⋆
கண்ணுக்கினிய⋆ கருமுகில் வண்ணன் நாமமே
நண்ணுமின்⋆ நாரணன்⋆ தம் அன்னை நரகம் புகாள் (7)

நம்பி பிம்பி என்று⋆ நாட்டு மானிடப் பேர் இட்டால்⋆
நம்பும் பிம்பும் எல்லாம்⋆ நாலு நாளில் அழுங்கிப் போம்⋆
செம்பெருந் தாமரைக் கண்ணன்⋆ பேர் இட்டழைத்தக்கால்⋆
நம்பிகாள்! நாரணன்⋆ தம் அன்னை நரகம் புகாள் (8)

ஊத்தைக் குழியில்⋆ அமுதம் பாய்வது போல்⋆ உங்கள்
மூத்திரப் பிள்ளையை⋆ என் முகில் வண்ணன் பேர் இட்டு⋆
கோத்துக் குழைத்துக்⋆ குணாலம் ஆடித் திரிமினோ⋆
நாத் தகு நாரணன்⋆ தம் அன்னை நரகம் புகாள் (9)

‡சீர் அணி மால்⋆ திருநாமமே இடத் தேற்றிய⋆
வீர் அணி தொல்புகழ்⋆ விட்டுசித்தன் விரித்த⋆
ஓர் அணி ஒண் தமிழ்⋆ ஒன்பதோடொன்றும் வல்லவர்⋆
பேர் அணி வைகுந்தத்து⋆ என்றும் பேணி இருப்பரே (10)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥